1978 பிப்ரவரி 25]

திரு. எம். சங்கரலிங்கம்: பதவியிலே நிரந்தரம் பெற்ற ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு அனுமதி பெற்று, பயிற்சி பெற்று பிறகு கடைசி வேலை நாள் மட்டும் வந்து வேலை பார்த்தால், கோடை விடுமுறை ஊதியம் பெறத் தகுதியுள்ளவர் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதுவரை இருந்த நிலைமையை மாற்றி, 1977-லே ஒரு புதிய உத்தரவு வந்ததிலிருந்து இந்த உரிமையைப் போக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கடைசி நாளன்று வந்து பணி செய்பவர்களுக்கு விடுமுறை ஊதியம் இருக்கிறது என்பதுதான் நான் இப்போது சொல்லியிருக்கும் பதில்.

திரு. பி. ஆர். தாமஸ் : முதலிலே சொல்கின்ற விதியிலே 8 மாதம் வேலை பார்த்து 'ஸ்டடி லீவ்' என்ற விடுமுறையிலிருந்து வந்து, கடைசி நாள் மட்டும் வேலை செய்யவேண்டும் என்று புதிதாக உத்தரவு இருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த ஆணையினால் அப்படி உரிமை பெறாத பல ஆசிரியர்கள் கோடைக்கால விடுமுறை ஊதியம் வாங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதை ஒரு ஆலோசனையாக எடுத்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : தற்காலிகமாக ஒரு குறிப்பிட்ட ஆண்டிலே பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களும் அவ்வாறு 8 மாத காலமாவது குறைந்தது பணியாற்றியிருக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அவர்கள் ஏற்கெனவே பல ஆண்டுகள் பணியாற்றியிருப்பார்களானால், நிரந்தர ஆசிரியர்களுக்குக் கிடைப்பது போல, பயிற்சிக்குச் சென்ற அந்த ஆசிரியர்களுக்குக் கோடைக் கால ஊதியத்தை வழங்க அரசு முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த யோசனையையும் ஏற்றுக் கொள்கிறேன்.

Sterilization Operations.

*135 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that teachers were required to bring in a certain number of persons for sterilization operations under the "Family Welfare Scheme" during the Emergency period;

(b) if so, the details, thereof;

(*c*) whether it is a fact that persons who were not able to fulfil the target were punished; and

(*d*) if so, the number so punished?

அறுவை சிகிச்சைகள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெருக்கடிநிலை பிரகடன காலத்தில் ஆசிரியர்கள், குடும்ப நல அறுவை திட்டத்திற்கு ஆட்கள் கொண்டு வரவேண்டுமென்று, நிர்ணயம் செய்யப்பட்டிருந்தனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது பற்றிய விபரம் யாது ?

(உ) நிர்ணயம் செய்யப்பட்ட எண்ணிக்கையைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது உண்மையா ?

(எ) ஆம் எனில், அவ்வாறு தண்டனைக்குள்ளானவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) 1976-77ம் ஆண்டில் இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குடும்ப நல அறுவை சிகிச்சை திட்ட குறியீட்டளவை பூர்த்தி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு ஆசிரியரும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய தகுதியான இரு நபர்களை அருகில் உள்ள அறுவை சிகிச்சை நிலையத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும், இத்திட்ட குறியளவை பூர்த்தி செய்ய ஆசிரியர்கள் முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் அரசு ஆணையிட்டது. இதனை செயல் படுத்தாத ஆசிரியர்களின் மீது பழி வாங்கும் நோக்கம் இருக்கக்கூடாது எனவும் எவ்வித தண்டனைகளையும் வழங்கக்கூடாது எனவும் அரசு ஆணை யிட்டது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : பல பள்ளிகளிலே குறியீட்டை அடையாதவர் களுக்கு, இத்தனை பேர்கள் என்று ஆட்கள் சேர்க்காத ஆசிரியர்களுக்கு ஒரு இன்கிரிமெண்ட் நிறுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால் அந்தக் குறையை நீக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

1978 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : குறிப்பிட்ட ஆசிரியர்களைப்பற்றித் தகவல் தந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Thiru A. R. DAMODARAN: Sir, may I know whether this order has been withdrawn and whether it is the policy of the Government not to employ teachers for the Family Welfare Scheme in the future?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : குடும்ப நலத் திட்டம் என்பது நாட்டிலே எவ்வளவு இன்றியமையாதது என்பது எல்லோருமே உணர்ந்த ஒன்றாகும். அதனாலே அதற்கான பல்வேறு முயற்சிகளிலே இப்படியும் ஒரு முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு அதில் கஷ்டம் இருந்தால், அதைப் பற்றி கவனித்துச் செய்யலாம். அந்தக் கஷ்டங்கள் இருந்துதான் தீரும். குடும்ப நலத் திட்டம் வெற்றி பெறுவதில் எல்லோரும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இந்த அறுவை சிகிச்சைக்கு ஆசிரியர்களை இன்றைய தினம் பஞ்சாயத்து யூனியனிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கோட்டாவை அதிகரித்திருக் கிறார்கள். 2 பேர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 10 வரைக்கும் அவர்கள் கோட்டா கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தண்டனைகள் கொடுப்பதாகவும் சொல்கிறார்கள். தண்டனைகள் நேரடியாகக் கொடுப்பதில்லை. மறைமுகமாகக் கொடுக்கிறார்கள். அப்படி ஓரளவுக்கு எனக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. மீட்டிங் நடக்கும்போது சொல் கின்றார்கள். இதற்கு ஏதாவது ஒரு உடனடி நிவாரணம் தேட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு தருவதிலே இந்த அரசு தயங்காது. அதற்கு வேண்டிய நடவடிக்கை இந்த அரசு எடுக்கும். குடும்ப நலத் திட்டம் வெற்றி பெற வேண்டுமென்பதற் காகத்தான் அந்தக் கருத்தைச் சொன்னேன். 2020 ஆம் ஆண்டில் ஜனத் தொகை 2 மடங்கு ஆகிவிடும் என்று சொல்கிறார்கள். பிரச்சினை எவ்வளவு வேகமாக வளர்கிறது என்பது தெரிகிறது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு, நாம் மக்களுக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே இந்தப் பிரச்சினையில் நாம் இன்னும் தீவிரம் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ஜார்ஜ் கோமகன் : குடும்ப நலத் திட்டம் நல்ல திட்டம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதற்காக எழுத்தறிவிக்கின்ற ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்துகின்ற முறையில் அவர்களை இதற்காகப் பயன்படுத்துவது அவ்வளவு நல்லதாக அமையாது என்பதை இந்த அரசு ஆராய்ந்து பார்த்து, இந்தத் திட்டத்தைக் கைவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கட்டாயம் என்பது நிச்சயமாக இல்லை. அப்படிச் சங்கடங்கள் இருந்தால், நடவடிக்கை எடுக்காமலிருக்க துறைக்குத் தெரிவிக்கப்படும். சமுதாயத்தில் ஆசிரியர்களுக்குத் தனி மரியாதை இருப்பதால்தான், நாம் அவர்களை இந்த நல்ல திட்டத்திற்குப் பயன் படுத்திக்கொள்வதில் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : ஆசிரியர்களுக்கு ஒரு தனி மரியாதை இருக்கிறதென்பதற்காக அவர்களை இந்தப் பணிக்குப் பயன்படுத்துகிறோ மென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைவிட அதிகமான மதிப் பைப் பெற்றவர்களாகச் சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர் களுக்கும் ஒரு 'கோட்டா' கொடுத்து, அவர்களையும் இந்த அரசு பயன் படுத்திக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். நாட்டிற்குத் தேவை யான பணியில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். எனவே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அப்படிப்பட்ட 'கோட்டா' கொடுக்கப்படுமா? அல்லது ஊருக்கு இளைத்தவர்கள் ஆசிரியர்கள் மட்டும்தானா?

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாட்டு நிலைமையை உணர்ந்து, சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கள் கடமையைச் செய்வார்கள் என்பதால், அவர்கள் தொடர்பாக எதுவும் சொல்லவில்லை.

Thiru A. R. DAMODARAN: Sir we are all for family planning and there is no doubt about it; and I accept the very good intentions of the Hon. the Minister for Education. Unfortunately, while he has stated that there will be no compulsion, the orders in the field are definitely translated otherwise and that is why I want to know this. I do not mind if they have volunteers from teachers for family welfare work. But, will there be an order that teachers will not be asked to do this work except on a voluntary basis? Of course, they

can volunteer for this work. May I know whether the Government would make their policy very clear in this matter because the entire reaction will be on the Ministry if something goes wrong in the field?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன நல்ல யோசனையைக் கருத்தில் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதைப்போல, ஆசிரியர்கள் விரும்பினல் மாத்திரம், அவர்களைப் பயன்படுத்தலாம். அப்படி அவர்கள் விரும்பி இந்தத் தொண்டைச் செய்ய வரும்போது, அதற்காக அவர்களுக்குத் தனி யாக ஊதியம் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுவும் ஒரு நல்ல யோசனைதான்.

திரு. எம். சங்கரலிங்கம் : தற்போது குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை அமுல் நடத்துவதில் கட்டாயம் எதுவும் இல்லையென்று சொன்னலும், ஒவ் வொரு மாவட்டத்திற்கும் ஒரு 'கோட்டா' ஒதுக்கப்படுகிறது. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக ஹெல்த் டிப்பார்ட்மெண்டையும், பஞ்சாயத்து யூனியன் ஆணையர்களையும் அழைத்து, ஒவ்வொருவருக்கும் ஒரு 'கோட்டா' கொடுக்கிறர். பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் எல்லாப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஒரு 'கோட்டா' கொடுக்கிறர். அவர்கள் நெருக் கடிக் காலத்தில் தனியார் மருத்துவ மனைகளிலும், அரசு மருத்துவ மனை களிலும் ஆட்களைச் சேர்ப்பதற்கு அலைந்துகொண்டிருந்தார்கள். இப்போது அமைச்சரவர்கள் கட்டாயப்படுத்தப்படவில்லை என்று சொன்னலும், மறை முகமாக 'கட்டாயம்' இருக்கிறது. எனவே 'கோட்டா' நிர்ணயிக்காமல் ஒரு வாரத்தை பிக்ஸ் பண்ணி, எல்லோரும் அந்தப் பணியிலே ஈடுபடுவதற்கான நிலையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் முதலில் குறிப்பிட்டதுபோல் 2020 ஏ.டி. யில் இப்போதிருக்கும் ஜனத்தொகை இரண்டு மடங்காகிவிடுமென்ற அடிப்படையில், அதைத் தடுக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப் பட வேண்டுமென்ற நோக்கத்தில்தான் அரசு இருக்கிறது. அரசு பல்வேறு கோட்டா'-க்களை நிர்ணயித்துத்தான், நடவடிக்கை எடுக்க முடியும். அப்படிச் செய்தால், 2020 ஆம் ஆண்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். எனவே கட்டாயப்படுத்தக்கூடாது என்பதை ஏற்றுக்கொள்ளலாமே தவிர, திட்டம் போட்டுக் காரியங்களைச் செய்யக்கூடாதென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. பி. ஆர். தாமஸ் : பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத்தான் இந்தத் தொல்லை அதிகமாக இருக்கிறதென்பதை அரசுக்கு அறிவித்துக்கொள்கிறேன். எனவே அவர்களைக் கட்டாயப் படுத்தக்கூடாதென்பதற்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்ப அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திருப்பித் திருப்பி அதைத்தான் கேட்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கடந்த 9 மாதங்களில் பல்வேறு வகையான ஆசிரியர்களை நான் சந்தித்துக்கொண்டிருக்கிறேன். எந்த ஆசிரியரும் இதுவரை இப்படிப்பட்ட குறைபாட்டைச் சொல்லவில்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Co-education in Boys' High Schools.

* 136 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received that co-education be continued in Boys' High Schools or girls be admitted in such schools if their parents so desire; and

(b) if so, the action taken thereon?

ஆண்கள் பள்ளிகளில் பெண்களும் ஒன்றாகக் கல்வி பயிலுதல்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளில், அவர்களுடன் பெண்களும் ஒன்றாகக் கல்வி பயிலும் முறை தொடர்ந்து செயல்படுத்துவது அல்லது மகளிரின் பெற்றோர்கள் விரும்பினால் அந்த பள்ளிகளில் அவர்களை சேர்ப்பது குறித்த முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?